DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : MC 8/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | கவிதா |
| Father / Husband Name | முருகவேல் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 06.11.2025**

**குறுக்கு விசாரணை**

1. நான் B.Com படித்துள்ளேன். எனக்கும் என் கணவருக்கும் காதல் திருமணம். நாங்கள் 10.09.2008 ல் திருமணம் செய்துக்கொண்டோம். இந்த வழக்கை ஜீவனாம்சம் கேட்டும் விவாகரத்து கேட்டும் தாக்கல் செய்துள்ளேன். நான் வேறு வழக்கு ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் திருமணம் மதுராந்தகத்தில் உள்ள அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடந்தது. எங்கள் திருமணத்திற்கு இருவீட்டாரும் சம்மதம் தெரிவித்துதான் நடந்தது. திருமணத்திற்கு முன்பு நான் சிவில் சப்ளை டிப்பார்ட்மெண்ட்டில் காண்ட்ராக்டில் டேட்டா ஆப்ரேட்டராக வேலை செய்தேன். அப்போது என் கணவர் கொத்தனாராக வேலை செய்தார். திருமணத்திற்கு பிறகும் நான் வேலை செய்தேன். திருமணத்தின்போது என் வீட்டில் எனக்கு 7 பவுன் மற்றும் கணவருக்கு 1 பவுன் போட்டார்கள். இதை நான் என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. திருமணத்திற்கு பிறகு நாங்கள் இருவரும் அவர் வீட்டில் தான் வசித்தோம். அங்கிருந்து தான் வேலைக்கு போவேன் என்றால் சரிதான். அப்போது அவரும் வேலை செய்து வந்தார். அப்போது நான் 12,000/-சம்பாதித்தேன். எங்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. 08.04.2013 ம் தேதி குழந்தை பிறந்தது. நானும் என் கணவரும் சம்பாதித்து தான் வீடு கட்டினோம் என்றால் சரியல்ல. அவர் வேலைக்கு சென்று வரும் பணத்தில் தொடர்ந்து குடித்துவருவார். என்னுடைய பணத்தில் தான் வீடு கட்டினேன். எதிர் மனுதாரரர் மற்ற பெண்களுடன் தகாத உறவில் இருந்ததற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மேல்மருவத்தூரில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மற்றும் CSR இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது என் பெற்றோருடன் சாத்தனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் குழந்தை என்னுடன் தான் உள்ளார். என் குழந்தையின் படிப்பு செலவை நான் தான் பார்த்துக்கொள்கிறேன். தற்போது என் குழந்தைக்கு 13 வயது.

3. என் மகள் பெரிய மனுஷி ஆன விஷேசத்திற்கு எதிர் மனுதாரரை அழைத்தேனா என்றால் இல்லை. 21.07.2023 அன்று என் கணவர் என்னை

அடித்ததும் யார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் அன்றிரவு என் கணவர் குடித்துவிட்டு இருந்தார். அவரை உள்ளே வந்து படுக்க சொன்னேன், அப்போது கட்டையால் என் காலை அடித்து உடைத்துவிட்டார். இது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கற்ப்பகவிநாயகா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**